மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அதன்மேல் விவாதம் ஒன்றும் வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி அளித்தபிறகு அதற்குமேல் அதில் என்ன விவாதம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு பொருள் குறித்து பேசுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படும் திட்டங்களை அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். நீங்கள் திட்டங்களை நிறைவேற்றினீர்களா அல்லது நிறைவேற்றவில்லையா என்ற பிரச்சினைக்குள் நான் போகவில்லை. அரசு உறுதிமொழிக் குழுவிற்கு அனுப்பி வையுங்கள் என்ற கோரிக்கையைத்தான் நான் அவைமுன் எடுத்து வைத்திருக்கிறேன்.*

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது முதல் இருபத்தி நான்காவது வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2017 ஜுலை 14] [திரு. சி. ராஜா]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு நன்றி தெரிவிக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மீனவர்கள் அதிகம் வசிக்கின்ற கிராமங்களைக் கொண்ட மாவட்டம். இம்மாவட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களில் மீனவ மக்கள் நிரம்ப வசித்து வருகிறார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடற்கரை நீளம் 187.9 கி.மீ., மீனவ கிராமங்களின் எண்ணிக்கை 53. கடல் மீனவர்கள் 94,364 பேர். உள்நாட்டு மீனவர்கள் 5,300 பேர். மொத்தமாக 99,664 மீனவர்கள் தொழில் செய்து வருகிறார்கள். 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் அங்கு தொழில் செய்து பிழைத்து வருகின்றார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மீன் வளப் பல்கலைக்கழகம் தந்து மீனவ மக்களின் கலங்கரைவிளக்கமாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைத் தந்து இந்த ஆண்டே, இப்பொழுதே மாணவர்கள் சேர்க்கை தொடங்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த சிறப்பான அறிவிப்பினைத் தந்திருக்கின்ற மாண்புமிகு